# மொழிபெயர்ப்பில் உள்ளார்ந்த அர்த்தங்கள்
## ஆங்கிலமொழியில் 'சிவஞானபோதம்' சைவப்பெரியார் எஸ்.சிவபாதசுந்தரம் வலியுறுத்தும் கருத்துக்கள்

சி.காயத்ரீ

**ஆய்வுச்சுருக்கம்**

*மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலுள்ள விடயங்களை அல்லது அதில் சொல்லப்பட்டதை, அதன் கருத்து மாறுபடாமலும் அதன் சுவை சிறிதும் குன்றாத வகையிலும் பிறிதொரு மொழியில் எடுத்துச் சொல்லும் செயற்பாடாகும். இங்கே சொல்லப்படும் கருத்து சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டு, அதன் உள்ளார்ந்த அர்த்தம் சரியாக விளங்கிக் கொள்ளப்பட்டு அதன் பின்னரேயே குறித்த அம் மொழிபெயர்ப்புப் பணி முன்னெடுக்கப்பட வேண்டும். மொழிபெயர்ப்பின் வெற்றியானது மூலப்படைப்பின் பொருள் சிதையாதவாறும் அதன் சுவை குன்றாமலும் பிறிதொருமொழியில் கொண்டு சேர்ப்பதிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு கீழை நாட்டுப்பனுவல்கள் பலவும் மேலைநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுவருகின்றன. இந்த அரிய முயற்சியில் ஈழத்தவர் பலரும் ஈடுபட்டமை மறுப்பதற்கில்லை. கீழைநாட்டுப்பனுவல்களில் கூறப்படும் தத்துவங்கள் பலவும் மேலைநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டாலும் அவற்றுள் பொதிந்துள்ள உணர்வுபூர்வமான அர்த்தங்களைக் கொள்ளல்-கொடுத்தல் செய்வதென்பது பெரிதும் சவாலான ஒருவிடயமாகும். அந்தவகையில் வயலற் பரஞ்சோதி எனும் பெண்மணி சிவஞானபோதத்தை ஆங்கில மொழியில் கொண்டு செல்லும்போது உள்ளார்ந்த உண்மை அர்த்தங்களைக் கொண்டுவருவதில் சிறிது சிதைவு கண்டுள்ளதாக சைவப்பெரியார் எஸ்.சிவபாதசுந்தரம் அவர்களால் கூறப்படும் கருத்துக்களே இங்கு நோக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு நுணுகி ஆராய்ந்து ஈழத்தவர் ஒருவர் கருத்துக் கூறுகிறார் என்றால் உண்மையில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் ஆகும். இதனைக் கண்டறிவது மொழிபெயர்ப்பில் உள்ளார்ந்த அர்த்தத்துக்கு உள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாகவும், மொழிபெயர்ப்பில் பொருட்சிதைவு ஏற்படாவண்ணம் மூல ஆக்கத்துக்கு விசுவாசமான முறையில் கொண்டு செல்வதன் அவசியத்தையும், மொழிபெயர்ப்பாளர் எவ்வளவு அவதானமாகச் செயற்படவேண்டும் என்பதைக் கூறுவதாகவும் அமையும். மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதம், வயலற் பரஞ்சோதி ஆங்கிலமொழியில் அளித்துள்ள சிவஞானபோதம்,* A Rejoinder by S.Shivapadasundaram *என்பன முதல்நிலைவளங்களாக இவ் ஆய்வில் கொள்ளப்படுகின்றன.*

**திறவுச் சொற்கள் :** விரிவான மொழிபெயர்ப்பு. உள்ளார்ந்த அர்த்தங்கள். சித்தாந்தப்பனுவல்கள் சவஞானபோதம்

**அறிமுகம்**

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலுள்ள விடயங்களை அல்லது அதில் சொல்லப்பட்டதை, அதன் கருத்துமாறுபடாமலும் அதன் சுவை சிறிதும் குன்றாத வகையிலும் பிறிதொரு மொழியில் எடுத்துச் சொல்லும் செயற்பாடாகும். இங்கே சொல்லப்படும் கருத்து சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டு, அதன் உள்ளார்ந்த அர்த்தம் சரியாக விளங்கிக் கொள்ளப்பட்டு அதன் பின்னரேயே குறித்த அம் மொழிபெயர்ப்புப்பணி முன்னெடுக்கப்பட வேண்டும். பொருளுக்கு முதலிடமும், நடைக்கு இரண்டாமிடமும் தரும் வகையில் மூல மொழிச்செய்திக்கு மிக நெருங்கிய இயல்பான நிகரனைப் பெறுமொழியில் தருவதே மொழிபெயர்ப்பு என்பார் அறிஞர் நீடா.[1]

எல்லா மொழிவுகளுக்கும் பொருள், உணர்ச்சி, தாக்கம் என்னும் மூன்று

உதவி விரிவுரையாளர், மொழிபெயர்ப்புக் கற்கைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*076 9424704 gayachan57@gmail.com*

பரிமாணங்களைக் கொண்ட 'பொருண்மை' உண்டு என்று சொல்லலாம். சிறந்ததொரு மொழிபெயர்ப்பில், இந்த மூன்று பரிமாணங் களையும் நாம் தருமொழியிலிருந்து பெறு மொழிக்கு முற்று முழுமையாகக் கொண்டு செல்லுதல் வேண்டும்.[2] அத்தகைய மொழி பெயர்ப்பே உள்ளார்ந்த அர்த்தங்கள் பொதிந்த மொழிபெயர்ப்பாகும்.

இவ்வாறு கீழை நாட்டுப் பனுவல்கள் பலவும் மேலை நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இந்த அரிய முயற்சியில் ஈழத்தவர் பலரும் ஈடுபட்டமை மறுப்பதற்கில்லை.

இந்தப் பனுவல்கள், குறிப்பாகச் சைவ சித்தாந்தப் பனுவல்கள் மிகவும் ஆழமான உள்ளார்ந்த அர்த்தங்கள் பொதிந்தவையாகக் காணப்படுகின்றன. அதனைக் கருத்துச்சிதைவு சிறிதேனும் இன்றி சுவை குன்றா வகையில் பிறிதொரு மொழியில் உரியவாறு எடுத்துக் கூறுவதென்பது மிகவும் சவாலான ஒரு விடயமாகும். அதனை நுணுகி ஆராய்ந்து ஈழத்தவர் ஒருவர் கருத்துக் கூறுகிறார் என்றால் உண்மையில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் ஆகும்.

'சிவஞானபோதம்', வயலற் பரஞ்சோதி அவர்களின் விரிவான மொழிபெயர்ப்பு முறையில் அமைந்த விளக்கம், எஸ். சிவபாதசுந்தரம் அவர்கள் வயலற் பரஞ்சோதி அவர்களின் விளக்கத்துக்கு அளித்த பதில் விளக்கம் என்பன முதல் நிலை வளங்களாக இவ் ஆய்வில் கொள்ளப்படுகின்றன. இம் முயற்சியின் மூலம் சைவப்பெரியார் எஸ். சிவபாதசுந்தரனார் உள்ளார்ந்த அர்த்தங்களை துல்லியமாகத் தெளிவு படுத்துகிறார்.[3] பல்வேறு சைவ சித்தாந்தப் பனுவல்களை ஆக்கிய அவரின் அனுபவம் இம்முயற்சியில் பெரிதும் கை கொடுத்துள்ளது. மூலத்தின் நுதல் பொருளில் (Subject matter) பயிற்சியுடைய பெரும்மொழியாளன் அம்மொழி பெயர்ப்பைப் படிக்கும்போது, மூலத்தின் தமிழ்மொழி வாசகன் அடையும் அனுபவங் களைப் பெறவேண்டும். அதுவே மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாகும் என்பார் அயன் பின்லே.[4] இங்கே சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் நுதல்பொருளில் மிகுந்த தாடனம் மிக்கவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**ஆய்வு நோக்கமும் முறையியலும்**

கீழை நாட்டுப் பனுவல்களில் கூறப்படும் தத்துவங்கள் பலவும் மேலை நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டாலும் அவற்றுள் பொதிந்துள்ள உணர்வு பூர்வ மான அர்த்தங்களை கொள்ளல், கொடுத்தல் செய்வதென்பது பெரிதும் சவாலான ஒரு விடயமாகும். அந்த வகையில் வயலற் பரஞ்சோதி எனும் பெண்மணி சைவ சித்தாந்தம் தொடர்பான தனது ஆக்கங்களில் உள்ளார்ந்த உண்மை அர்த்தங்களைக் கொண்டு வருவதில் சிறிது சிதைவு கண்டுள்ளதாக எஸ். சிவபாதசுந்தரம் அவர்களால் கூறப்படும் கருத்துக்களே இங்கு ஆய்வுசெய்யப்படுகின்றன. உண்மையில் ஒரு மொழியில் கூறப்படும் கருத்தைப் பிறிதொரு மொழியில் கொண்டு செல்ல முற்படும்போது பொருட்சிதைவு ஏற்படா வண்ணம் மூல ஆக்கத்துக்கு விசுவாச மான முறையில் கொண்டு செல்வது மிகவும் அவசியமாகும்.

அந்த வகையில் இங்கு சிவஞானபோதம் பற்றி வயலற் பரஞ்சோதி எனும் பெண்மணி விரிவான மொழிபெயர்ப்பு முறையில் ஆங்கிலத்தில் கூறிய விடயங்களைக் கற்று, அதன் பின் எஸ்.சிவபாதசுந்தரம் எனும் ஈழத்து அறிஞர் முன்வைத்த கருத்துக்கள் நோக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரிவான மொழிபெயர்ப்பு என்பது மூல மொழியில்

கூறப்படும் விடயத்தை, உள் அர்த்தத்தை விளக்கத்தோடு இலக்கு மொழியில் முன்வைப்பதாகும். இங்கே வயலற் பரஞ்சோதி எனும் பெண்மணியின் படைப்பு விரிவான மொழிபெயர்ப்புப் படைப்பாகவே உள்ளது.

**சைவ சித்தாந்தப் பனுவல்களின் மொழி பெயர்ப்பும் ஈழத்தவர்களின் பங்களிப்பும்**

மேலைத்தேயத்தவர்களின் வருகையுடனேயே தமிழ் கூறும் நல்லுலகில் மொழி பெயர்ப்புப் பணி எழுச்சி பெற்றது என்று கூறலாம். குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் கீழைத்தேசங்களுக்கு வருகை தந்த மேலை நாட்டவர் பலரும் தமிழ் இலக்கியப் பனுவல்களை ஆழ்ந்து கற்று அவற்றை மொழிபெயர்ப்பு செய்யும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்ட அதேவேளை நம்தேசத்தவரும் மொழிபெயர்ப்புப் பணியில் முனைப்புக் காட்டியமையை மறுப்பதற்கில்லை.

இவ்வாறு ஆழ்ந்த தத்துவங்களைக் கூறும் பனுவல்களைக் கூட மொழிபெயர்க்கும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். எடுத்துக்காட்டாக சேர் ஐசாக் தம்பையா என்பார் தாயுமான சுவாமிகள் அருளிச் செய்த பாடல்களை Palms of a Saiva Saint என மொழிபெயர்த்துள்ளார். சேர் பொன் அருணாச்சலம் அவர்கள் திரு முருகாற்றுப் படையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவ்வாறு பல்வேறு அருட் பனுவல்கள் மேலை நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான தத்துவங்கள் செறிந்த அருட் படைப்புக்களை மொழிபெயர்க்கும்போது பல்வேறு விடயங்கள் கவனத்தில் கொள்ளப் படவேண்டும். அவற்றின் உள்ளார்ந்த அர்த்தங்கள் சிதைவடையா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். இங்ஙனம்வயலற் பரஞ்சோதி எனும் கிறிஸ்தவ மதப் பெண்மணி ஆங்கிலத்தில் சிவஞானபோதத்தைக் கொண்டு செல்லும்போது உள்ளார்ந்த அர்த் தங்களில் சிறிது சிதைவு கண்டுள்ளதாக சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் சுட்டிக்காட்டுகிறார். உண்மை அர்த்தத்தை உள்ளார்ந்த அர்த்தத்துடன் கொண்டு சேர்ப் பதிலேயே மொழிபெயர்ப்பின் வெற்றி தங்கியுள்ளது. அந்த வகையில் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் சுட்டிக்காட்டும் சில விடயங்களைப் பற்றி ஆய்வு செய்வது எதிர்கால மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்கும்.

**சிவஞானபோதம்**

மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கு ஆகும். இதில் மெய்கண்ட தேவர் அருளிய சிவஞானபோதம் முதல் நூலாகவும் அருணந்தி சிவாச்சாரியார் அருளிய சிவஞான சித்தியார் வழி நூலாகவும் கொள்ளப்படுகிறது.

புறச் சந்தான பரம்பரையின் முதல்வர் மெய்கண்ட தேவ நாயனாரால் அருளிச் செய்யப்பட்டதே சிவஞானபோதம் ஆகும். சனகர் முதலிய முனிவர்கள் நால்வருக்கும் வேத வேதாந்தங்களைக் கற்றுத் தீராத மலைவைத் தீர்த்தற் பொருட்டு, கல்லால மர நிழலில் எழுந்தருளிய தட்சணாமூர்த்தியின் திருக்கரத்தில் இருந்தது சிவஞானபோதம். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அருள் புரியும் பொருட்டு எழுந்தருளி வந்து குருந்த மரநிழலில் வீற்றிருந்த குருமூர்த்தி தன் திருக்கரத்தில் தரித்திருந்தது சிவஞானபோதம். நந்தியெம் பெருமானுக்கு ஆகமங்கள் கூறும் பொருள் வேற்றுமை பற்றி ஐயமுண்டானபோது, அதை நீக்குவதற்குச் சிவபெருமானால் உபதேசிக்கப்பட்டது சிவஞானபோதம். இவ்வாறு சிவஞானபோதத்தைக் கேட்டருளிய நந்தியெம்பெருமான், அதைச் சனற்குமார முனிவருக்கும் சனற்குமாரர் சத்தியஞான

தரிசனிகளுக்கும் சத்தியஞான தரிசனிகள் பரஞ்சோதி முனிவருக்கும் அருளிச் செய்தனர். பரஞ்சோதி முனிவர் திருவெண்ணெய் நல்லூரில், தன் மாமனார் வீட்டில் வீற்றிருந்த மெய்கண்டதேவரிடம் வந்து, சத்தியஞான தரிசனிகளிடம் தாம் கேட்டவாறு இந்நூலை மெய்கண்டாருக்கு உபதேசித்தார். மெய்கண்டார் சிவஞானபோதத்திலுள்ள பன்னிரண்டு சூத்திரங்களையும் தமிழில் மொழிபெயர்த்து, அதற்குக் கருத்துரை, ஏது, திருத்தாண்டகம் முதலியவற்றோடு கூடிய வார்த்திகப் பொழிப்புரையுஞ் செய்து, அவற்றை அருணந்தி சிவாச்சாரியாருக்கு உபதேசித்தார்.[5]

இவ்வாறு சிறப்புப் பாயிரம், மங்கள வாழ்த்து, அவையடக்கம் என்பவற்றுடன் பன்னிரண்டு சூத்திரங்களும் அமையப் பெற்றுள்ளன.

**வயலற் பரஞ்சோதியின் விளக்கமும் எஸ்.சிவபாதசுந்தரம் கூறும் பதிலும்**

கிறிஸ்தவ மதப் பெண்மணியான வயலற் பரஞ்சோதி என்பார் சைவசித்தாந்தப் பனுவல்கள் பற்றிய பல்வேறு ஆராய்ச்சி, ஆக்கங்களில் ஈடுபட்டவர் ஆவார். வேற்று மதத்தவராய் இருந்தும் இம்முயற்சியில் ஈடுபடும் அவரது முயற்சி உண்மையில் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். எனினும் ஆழ்ந்த தத்துவங்கள் பொதிந்த தெய்வீக அருட்பனுவல்களை மொழி பெயர்க்கும்போது அதன் பொருள் நுட்பத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். இங்கே மூன்று நிலைகளில் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் பொருட்சிதைவைச் சுட்டிக்காட்டுகிறார்.

1. சித்து அசித்தை எவ்வாறு ஆழ்கிறது, அசித்து சித்தை எவ்வாறு ஆழ்கிறது
2. மாயையில் ஏற்படும் மாற்றம் எத்தகையது
3. மாயை எங்ஙனம் ஆன்மாவை ஒளிரச் செய்கிறது

இவ் ஆய்வில் சித்து அசித்தை எவ்வாறு ஆழ்கிறது, அசித்து சித்தை எவ்வாறு ஆழ்கிறது எனும் விடயம் பற்றிய பொருட் சிதைவும் அதற்கு சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் அளிக்கும் விளக்கமுமே ஆய்வுக்குட் படுத்தப் படுகின்றன.

முதலாவது சூத்திரத்துக்கு வயலற் பரஞ்சோதி கூறுவது, 'Existence is thus invariably associated with production and dissolution'. ஆனால் மெய்கண்டதேவர் உண்மையில் கருதுவது உலகம் என்பது உண்மையாதலால் அதற்கு மூலம் ஒன்று இருக்க வேண்டும். இதனை சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் 'Since there is a subject to the three operations of production, maintenance and dissolution, it is an existing thing that has been caused' என அழகாகத் தெளிவுபடுத்துகிறார். அதாவது படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் புரியும் பொருளொன்று உள்ளதால் அதுவே அனைத்துக்கும் காரணமாகும்.

மேலும் உலகத்தை மண் பானையாகவும், அதனை சிருஷ்டித்தவரைக் குயவனாகவும் கூறும் உவமைக்கு வயலற் பரஞ்சோதி அவர்கள், குயவன் பானை வனைவதில் வல்லவராக விளங்கினாலும் அதன் பாவனை, காரணம் என்பவை பற்றி அறியாது இருக்கலாம் என்று கூறுவார். அதனால் வியாபகத்தன்மை கேள்விக்குறியே என்பதே வயலற் பரஞ்சோதி அவர்களினுடைய வாதம். அதற்கு சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார், பானையை சிருஷ்டித்தவர் அதனைத் தன் கையில் வைத்திருக்கும்வரை அது பற்றிய முழு அதிகாரமும் குயவனையே சாரும். அது போலவே சிருஷ்டி அவர் கையில் உள்ளவரை

சிருஷ்டித்தவரிடத்தே முழு அதிகாரமும் உண்டென விளக்கம் அளிக்கிறார்.

இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலான உறவைக் கூறும்போது 'The relations are either attributes of the terms to be related or they are independent' என்கிறார் வயலற் பரஞ்சோதி. அதனை சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் உதாரணம் மூலம் பின்வருமாறு விளக்குவார். ஐந்து இரண்டிலும் பெரியது. (5>2). ஆனால் இது ஐந்துக்கும் இரண்டுக்கும் உரிய உறவேயன்றி ஐந்து பெரியது என்றோ இரண்டு சிறியது என்றோ கூறிவிட முடியாது. ஏனெனில் 6 எனும் இலக்கத்தோடு பார்த்தால் 5 சிறிதே. அவ்வாறே இறைவனுக்கும் ஒவ்வோர் ஆன்மாவுக்குமான தொடர்பும் ஆகும்.

வயலற் பரஞ்சோதி வினவுகிறார் 'If God exists, who created Him?'. அதாவது கடவுள் இருக்கிறார் என்றால் அவரைப் படைத்தவர் யார்? இதற்கு சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் பதிலளிக்கிறார் 'It is only a thing which has components that requires a creator. It cannot be said that God is a thing which has components. Therefore God cannot be created'. அதாவது அங்கங்கள், வரையறைகள் கொண்டவற்றுக்கே சிருஷ்டி கர்த்தா ஒருவர் இருப்பார். ஆனால் இறைவன் இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டவர். எனவே இறைவனுக்கு சிருஷ்டி கர்த்தா இல்லை எனத் தெளிவுபடுத்துகிறார்.

சித்தினை அசித்து ஆள முடியாது அதேபோல் அசித்தினைச் சித்து ஆள முடியாது என்பது வயலற் பரஞ்சோதி என்பாரின் கருத்து. 'Chit cannot Act on achit, that Achit cannot act on Chit and so on.' இதற்கு சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அவர்களுடைய விளக்கம் பின்வருமாறு அமைகிறது. ஆன்மாவானது உடலை ஒரு கருவியாகக் கொண்டு தொழிற்படுகிறது. பஞ்ச பூதங்களாலான ஸ்தூல சரீரமும், மனமாகிய சூக்ஷூம சரீரமும் அசித்தாக உள்ளன. ஆன்மாவின் இயக்கம் இன்றி அவற்றால் தொழிற்பட இயலாது என்பது வெளிப்படை. அந்த ஆன்மாவே சித்தாக உள்ளது. எனவே சித்து அசித்தை ஆழ்கிறது. மறுபுறம் ஆன்மாவின் இயக்கத்துக்கு அல்லது தொழிற்பாட்டுக்கு ஓர் ஊடகம் அல்லது கருவி அவசியம். உடலும் மனமும் அத்தகைய கருவிகளே. எனவே அசித்து சித்தினை ஆள்கிறது. இவ்வாறு உள்ளார்ந்த அர்த்தங்களைத் துல்லியமாகவும் தெளிவாகவும் விளங்க வைக்கிறார் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார்.

மேலும் வயலற் பரஞ்சோதி தனது கருத்துக்களில் தேவர்களை இறைவனாகத் தவறான முறையில் அர்த்தம் கொள்கிறார். அதாவது இறைவனும் தேவர்களும் ஒன்றே என அரத்தம் கொள்கிறார். அதற்கு சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் தேவர்கள் என்பார் நல்ல வினைகளைச் செய்தமையால் நல்லவற்றை அனுபவிக்கும் ஆன்மாக்களே எனத் தெளிவுபடுத்துகிறார். அதாவது தேவர்கள் தாம் ஆற்றிய நற்செயல்களின் விளைவாக இன்பத்தை அனுபவிக்கின்றனர். அவர்களுக்குரிய காலம் முடிந்தபின் அவர்களும் பூமியில் அவதரிக்க நேரிடும். ஏன் அவர்கள் ஒரு புழுவாகக்கூட இருக்கலாம். 'The Christian critic is probably mistaking the gods (Devas) for God. The Deavas are souls which experience the fruits of right action. These gods are different from Gods as the spirits are different from the Holy Spirit.'

இவ்வாறு வயலற் பரஞ்சோதி என்பாரின் சிவஞானபோதம் பற்றிய தவறான சில விளக்கங்களை அவரின் விரிவான மொழிபெயர்ப்பி

லிருந்து சுட்டிக்காட்டி விளங்க வைக்கிறார் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார். உண்மையில் காத்திரமான மொழிபெயர்ப்புப் படைப்பொன்றில் உள்ளார்ந்த அர்த்தங்கள் சிறிதளவும் சிதைவின்றிப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

**நிறைவுரை**

மொழிபெயர்ப்பின் வெற்றியானது மூலப்படைப்பின்பொருள்சிதைவுறாவண்ணம் அதன் சுவையுடன் பிறிதொரு மொழியில் கொண்டு சேர்ப்பதிலேயே தங்கியுள்ளது. அந்த வகையில் மொழிபெயர்ப்பில் குறித்த அந்த விடயத்தின் உள்ளார்ந்த அர்த்தம் சிறிதும் சிதைவுறா வண்ணம் இலக்கு மொழியில் கொண்டு சேர்க்கப்பட வேண்டும். தத்துவங்கள் செறிந்த அருட் படைப்புக்களை மொழிபெயர்க்கும்போது பல்வேறு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். குறிப்பாக சைவ சித்தாந்தப் பனுவல்கள் போன்ற அர்த்தம் செறிந்த தெய்வீக அருட் பனுவல்களை மொழிபெயர்ப்பு செய்யும்போது மொழிபெயர்ப்பாளர் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டி உள்ளது. அவற்றின் உள்ளார்ந்த அர்த்தங்கள் சிதைவடையா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். இங்கே சைவப்பெரியார் எஸ். சிவபாதசுந்தரனார் சிவஞானபோதம் பற்றிய தமது விளக்கத்தோடு வயலற் பரஞ்சோதி எனும் பெண்மணியின் விரிவான மொழிபெயர்ப்பு முறையில் அமைந்த சில கருத்துக்களுக்கும் மிகவும் துல்லியமாகப் பதிலளிக்கிறார். இதன்மூலம் சிவஞானபோதத்தின் உள்ளார்ந்த அர்த்தம் தெளிவுபடுத்தப்படுகிறது. உண்மை அர்த்தத்தை உள்ளார்ந்த அர்த்தத்துடன் கொண்டு சேரப்பதிலேயே மொழிபெயர்ப்பின் வெற்றி தங்கியுள்ளது. இதன்மூலம் வருங்கால மொழிபெயர்ப்பாளர்களும் மூலத்தின் நுதல்பொருளை நன்குணர்ந்து, உள்ளார்ந்த அர்த்தங்களைத் துல்லியமாகக் கொண்டு வருவதில் முனைப்புக் காட்டிப் பயனடைவர்.

**அடிக்குறிப்புகள்**


1. ஈஸ்வரன், ச., *(2015)*,மொழிபெயர்ப்பியல். பாவை பப்ளிகேசுஷன்ஸ், சென்னை, பக். 4.
2. முருகையன், இ., *(2014)*,மொழிபெயர்ப்பு நுட்பம். குமரன் அச்சகம், கொழும்பு, பக். 4-5.
3. Shivapadasundaram.S, (1982) **An Outline of Shivagnanabodham,**WITH A REJOINDER TO A CHRISTIAN CRITIC, Saiva Prakasa Press, Jaffna, p.1.
4. ஈஸ்வரன், ச., *(2015)*,மு. கு. நூ. ப 4.
5. நடராசா, ஆ., *(2008)* சிவஞானபோதச் சிற்றுரை. ரெக்னோ பிரின்ட், கொழும்பு, பக். 10-11.